Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO.57/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.4 , Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாபு | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | பாலசுப்பரமணியம் | தொழில் | அர்ச்சகர் |
| கிராமம் | திருப்பத்துர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்துர் | வயது | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 06th day of November 2023.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.-** (எதிரி அப்சல் (எ) ராக்கி ஆஜரில் உள்ளார்)

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் அர்ச்சகராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். நான் உதவி அர்ச்சகராக உள்ள கோட்டை ஈஸ்வரன் கோயில் உண்டியல் உடைத்தது சம்மந்தமாக 2020 ம் ஆண்டு தேதி மாதம் நினைவில்லை, போலிசார் அழைத்தன் பேரில் நான் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன். அங்கு வைத்து போலிசார் என்னிடம் மேற்கண்ட கையொப்பத்தை பெற்றார்கள். எதற்காக வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. கோயிலில் திருட முற்பட்ட நபரை கைது செய்துவிட்டதாக நான் கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதி கோரி, அனுமதிக்கப்பட்டதன் பேரில், அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் எங்களது கோயிலில் திருட்டு முயற்சி நடந்தது குறித்து கடந்த 24.09.2020 அன்று 17.40 மணிக்கு சென்றபோது அங்கு எதிரியை பிடித்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. பின்பு எதிரி தானாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் ஒன்று கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும், நந்தகுமார் என்பவரின் முன்னிலையிலும் பதிவு செய்தார்கள் என்றால்சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமுலத்தில் எதிரி தான் எங்களது கோயிலில் திருட

முற்ப்பட்டதாக ஒப்புக்கொண்டார் என்றால் சரியல்ல. மேற்கண்ட ஒப்புதல் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டது என்றும் அதை மறைத்து நான் தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**. இல்லை

Signature of Witness